நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 324/2025

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சந்திரகுமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | ராஜு |
| கிராமம் | : | மேச்சேரி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 59 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், அக்டோபர் மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.29PM

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தின்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 12.11.2021ம் தேதி காலை 8.30 மணி அளவில் மேட்டூர் காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் , சிறப்பு காவல்

உதவி ஆய்வாளர் மகாலிங்கம் மற்றும் தலைமைக்காவலர் மதனசேகர், காவலர் உமாசெல்வம் ஆகியோருடன் நானும் , மேட்டூர் எம்.ஜி.ஆர் பாலம் அருகே குற்ற சம்பவம் தடுப்பு சம்பவம் காரணமாக வாகன தனிக்கைக்காக சென்றோம். அங்கே இரண்டு இருசக்கர வாகனங்களுடன் இரண்டு நபர்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மினி டெம்போ அவர்கள் அருகில் வந்தது.

2. டெம்போவில் வந்தவர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களிடம் டெம்போவில் இருந்த மூட்டைகளை சீக்கிரமாக இறக்கி வையுங்கங்கள் என்று சொன்னார்கள். அதை பார்த்த நாங்கள் டெம்போ இருந்த இடத்திற்கு சென்றபோது டெம்போவை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். மேற்படி இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை விசாரிக்க ஒருவர் பெயர் சிவக்குமார் என்றும் மற்றொருவர் பெயர் ராஜேஷ்கண்ணா என்று சொன்னார்கள்.
3. அவர்களுடைய முகவரியை கேட்டதற்கு காவேரி நகரில் உள்ள வேல் கட்பீஸ் வீடு அருகில் இருப்பதாக சொன்னார்கள். எதிரிகள் அவர்களுடைய வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். எதிரிகள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை கர்நாடகாவில் இருந்து வாங்கி வந்து அதிக லாபத்திற்கு விற்பதற்காக வைத்திருப்பதாக சொன்னார்கள்.
4. சம்பவ இடத்திலேயே எதிரிகள் வைத்திருந்த மூட்டைகளை பிரித்து பார்த்தோம். அதில் ஹான்ஸ், எம்சென்ட், செயின் புகையிலை, கூல்லிப், V1 புகையிலை, விமல் பாக்கு ஆகியவை பண்டல் பண்டலாக இருந்தது. பிறகு எதிரிகளை மேட்டூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று பாராவசம் ஒப்படைத்தோம்.
5. கைப்பற்றப்பட்ட இரண்டு வாகனங்களையும் மற்றும் புகையிலை பொருட்களையும் இரண்டு கைப்பற்றுதல் மகஜரில் உதவி ஆய்வாளர் கைப்பற்றினார் நானும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மகாலிங்கமும் கையெழுத்து செய்தோம். (**என்னிடம் காட்டப்படும் 12.11.2021ம் தேதி 9.45 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 12.11.2021 ம் தேதி 10.00 மணிக்கு கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.**

6. எதிரி சிவக்குமார் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை காவல் உதவி ஆய்வாளர் பதிவுசெய்தார். அதில் எதிரிகள், நானும் மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் 3 பேரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். **அதில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
7. காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்தார். நாங்கள் அதற்கு உதவியாக இருந்தோம். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளனர். எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய இரண்டு இருச்சக்கர வாகனங்களின் பதிவெண் தற்போது நியாபகம் இல்லை. என்னை உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் விசாரித்தார். தற்போது அவர் இறந்துவிட்டார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நாங்கள் நிறுத்திய வாகனம் கிழக்கிலிருந்து மேற்காக வந்தது. நாங்கள் ரவுண்டானா அருகில் நின்றுக்கொண்டிருந்தோம். நாங்கள் நின்றுக்கொண்டிருந்த இடத்திற்கும் நான்கு சக்கர வாகனம் நின்றுக்கொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 60 அடி இருக்கும்.
2. உதவி ஆய்வாளர் ஏகாம்பரத்தை தவிர மற்ற நபர்கள் சீருடை அணிந்திருக்கவில்லை. நான் சொன்ன நான்கு சக்கரவாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அது குட்டியானை என்று சொல்லப்படுகிற மினி டெம்போ ரக வண்டியாகும். அந்த வண்டியை நாங்கள் துரத்தி பிடிக்க முயற்சி செய்யவில்லை.
3. அந்த வண்டி நேராக ஆண்டிகவுண்டர் நகர் நோக்கி சென்றது. அந்த வாகனம் மேட்டுரிலிருந்து வெளியே தெற்கு பக்கமாக சென்றிருந்தால் அம்மாபேட்டை காவல் நிலையத்தை கடந்தும், வடக்கு பக்கமாக சென்றிருந்தால் கொளத்தூர் காவல் நிலைய சோதனை சாவடியை கடந்தும் தான் செல்ல இயலும் என்றால் சரிதான்.
4. ஆஜர் 1ம் எதிரி சிவக்குமார் காவல் நிலையத்திலிருந்து கைதியை சிறைக்கு கொண்டு செல்ல வழக்கமாக வாடகைக்கு ஆமினிகார் வைத்து ஓட்டிவந்தார் என்றால் சரிதான். மேற்படி சிவக்குமார் எங்கள் காவல் நிலையத்திற்கு நன்கு அறிமுகமான நபர் என்றால் சரிதான். மேற்படி சிவக்குமார் தனக்கு வரவேண்டிய

வாடகையை கேட்டதால் இவ்வாறு ஒரு பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. எத்தனை மூட்டைகள் என்று என்னால் தோராயமாகத்தான் சொல்லமுடியும். சம்பவயிடத்திற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளன என்றால் சரிதான். பொதுமக்கள் 10–15 நபர்கள் எப்பொழுதும் நின்றுக்கொண்டிருப்பார்கள் என்றால் தூரம் குறிப்பிட்டு சொல்லமுடியாது. ஆனால் நின்றுக்கொண்டிருப்பார்கள். கிழக்கிலிருந்து மேற்காக செல்லும்போது வேகத்தடையை தாண்டிதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அந்த இடத்தில் வேகத்தடுப்பு ஒன்று உள்ளது.

6. இந்த வழக்கு சம்மந்தமாக அக்கம்பக்கத்து கடைக்காரர்களை நான் விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை காலை 08.45 மணிக்கு பிடித்து 09.00 மணிக்கு காவல் நிலையம் வந்துவிட்டோம். எதிரிகளின் வீடுகள் அமைந்துள்ள பகுதியில் இருந்துதான் அவர்களை பிடித்து சென்றோம்.

7. காலை 09.45 மணிக்கு ஒரு வண்டியை கைப்பற்றி காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். காலை 10.00 மணிக்கு ஒரு வண்டியை கைப்பற்றி காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர்தான் பதிவுசெய்தார். அதுப்பற்றி எனக்கு தெரியாது.

8. எதிரிகள் இருவரும் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் வாடகை கேட்டு தகராறு செய்ததால் அவர்கள் மீது பொய்யான வழக்கு பதிவுசெய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.10PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்**